**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.13 |
| Name | : | ராணி |
| Husband Name | : | ரவி |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 45/2025 |

**தேதி : 25.03.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டு வேலை செய்து வருகிறேன். எதிரி வசந்தியை தெரியும்.அவர் எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர். எதிரி தனது தங்கையின் மருத்துவ செலவிற்காக கடன் வாங்கி தருமாறு என்னிடம் கேட்டார். அவருக்கு நான் மூன்று தவணைகளாக ரூ.24,000/-, ரூ.9,000/-, மற்றும் ரூ. 25,000/- கொடுத்தேன். மேற்படி கடன்களை தனியார் நிதி நிறுவனங்களில் இருந்து வாங்கி கொடுத்தேன். மேற்படி கடன் அட்டைகள் எதிரியிடமே உள்ளது. நிதி நிறுவன ஊழியர்கள் தவணைகளை செலுத்தாத காரணத்தினால் என்னிடம் வந்து விசாரித்தபோதுதான் நான் எனக்கு எதிரி தவணைகளை செலுத்தாத விவரம் தெரியவந்தது. மேலும் அவர் ஊரில் இல்லை என்ற விவரமும் தெரியவந்தது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி எனக்கு பக்கத்து தெரு. நான் கடன் வாங்கி எதிரியிடம் மொத்தமாக பணத்தை கொடுத்தேன். ஐம்பது ஆயிரம் கடன் வாங்கி நானும், எதிரியும் ஆளுக்கு 25 ஆயிரம் எடுத்துக்கொண்டோம். நான் வாங்கிய கடனுக்கு தவணையை எதிரியிடம் கொடுத்துவிட்டேன். எதிரி தவணை தொகையை கட்டிவிட்டாரா என்றால் எதிரியிடம் கடன் அட்டை உள்ளது. அவருக்குத்தான் தெரியும். எதிரி என்னை திட்டமிட்டு ஏமாற்றவில்லை என்றாலும், நாங்கள் அனைவரும் ஒரே நேரத்தில் எதிரியிடம் பணம் கேட்டதால்அவரால் திரும்ப கொடுக்க முடியவில்லை என்றாலும் எதிரி பணத்தை திருப்பி கொடுக்க தயாராக உள்ளார் என்றாலும்சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.